3. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிந்தாமணி சிறப்பங்காடி, கோவை.

*2. குறுகிய கால வினா:— திரு. கு. ரமணி, திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டில் பணி புரியும் குமாஸ்தாக்கள் உட்பட சுமார் 1,500 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: சூப்பர் மார்க்கெட்டில் வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. அமைச்சர் இல்லையென்று சொல்கிறார். இப்போது முடிவாகி இருக்கலாம். அதனால் அப்படிச் சொல்கிறாரோ, என்னவோ தெரியவில்லை. ஆனால் அங்கே இப்போது தனி அதிகாரி ஒருவர் ஏற்படுத்தப்பட்ட பிறகு, தொழிலாளர்களது நிலைமைபற்றி சரியான நடவடிக்கைகள் எடுக்காததன் விளைவாக, பத்து வருஷமாக நல்ல பெயரோடு செயல்பட்டுவந்த சிந்தாமணி சூப்பர் மார்க்கெட், இன்றைக்கு மக்களுக்குப் போதுமான அளவில் சேவை செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே அந்தத் தனி அதிகாரி தொழிலாளர்கள் விஷயத்தில் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கையை எடுக்கச் செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே நான் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்று முழுமையாகச் சொல்லவில்லை. கேள்வி சூப்பர் மார்க்கெட்டில் பணி புரியும் குமாஸ்தாக்கள் உட்பட சுமார் 1,500 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்களா என்பதாகும். அதற்கு இல்லையென்று சொன்னேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மொத்தம் 1,318 பேர்கள் தான். வேலை நிறுத்தம் சம்பந்தமாக தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, ஒரு சமரசம் ஏற்பட்டு, ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

1977 ஜுலை 23]

திரு. கு. ரமணி: அவர்கள் ஏற்கனவே இந்த விவரங்களைக் கொடுத்திருந்தால் எனது கேள்வியே அப்படிப் போட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஊழியர்கள் வேலைக்குத் திரும்பி இருப்பதும் கூட அவர்களது கோரிக்கைகள் பூராவும் ஏற்கப்பட்டு திரும்பியிருக்கிறார்களா? அல்லது கோரிக்கைகளை ஏற்பது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் பேரில் திரும்பியிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா? இல்லையென்றால் மறுபடியும் அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் சங்கடமான கசப்பான நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே, உடனடியாக அந்தத் தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள அந்த விசேஷ அதிகாரி உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பங்காடியில் 1,318 தொழிலாளர்கள் 16 கோரிக்கைகள் வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தத்திற்கான தாக்கீதை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு 6—7—1977 இல் பதினொன்றே முக்கால் மணிக்கு அனுப்பினார்கள். உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரி தொழிலாளர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். என்றாலும் பேச்சு வார்த்தைக்குப்போகாது பன்னிரண்டரை மணிக்கு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள். பின்னால் 12 ஆம் தேதி பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. அவர்களது கோரிக்கைகளில் 14 கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களும் திருப்தி அடைந்து வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஒரு சில கோரிக்கைகள் பற்றி 25 ஆம் தேதி மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள். 25 ஆம் தேதி பேச்சுவார்த்தையில் எந்த விதமான முடிவும் ஏற்படவில்லை என்றால் ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பிவைப்பதைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்தப் பேரங்காடியில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குமுன் அவர்கள் வைத்த கோரிக்கைகளில் முக்கியமான கோரிக்கைகள் எவை? அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அவர்கள் 16 கோரிக்கைகள் வைத்தார்கள். அவைகளில் முக்கியமான கோரிக்கைகள் எவை என்பதை முடிவு செய்ய வேண்டியது தொழிலாளர்களே தவிர வேறு யாரும் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும். தொழி

லாளர்கள் இன்றைக்குத் திருப்தி அடைந்து வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்திருக்கிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: கோவை சிந்தாமணி சூபர் மார்க்கெட் தொழிலாளர்கள் பிரச்சினை ஏற்கனவே, டெபுடி லேபர் கமிஷனர் முன்னிலையில் இந்த 1,500 தொழிலாளர்களது சம்பளம், பஞ்சப்படி கோரிக்கைகள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இந்த உடன்பாட்டின் அடிப்படையில் அமலாக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அவர்களது கோரிக்கைகள் அமலாக்கப்பட்டிருப்பதனால்தான் அவர்கள் திரும்ப வேலைக்கு வந்து ஒழுங்காக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சில கோரிக்கைகள் பற்றி மீண்டும் 25 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது.

திரு எஸ்.ஜெ. சாதிக் பாட்சா: இந்த 16 கோரிக்கைகளில் எவை எவை முக்கியமான கோரிக்கைகள்? அவைகளை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஊதிய உயர்வு கேட்டு ஒரு கோரிக்கை இருக்கிறது. அதை அதிகாரி ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது அல்ல பிரச்சினை. சமரச உடன்பாட்டை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இப்படிப்பட்ட சிறப்பங்காடிகளில் உள்ள தொழிலாளர்கள் கோரிக்கைகளைக் கொடுத்தவுடன் வேலை நிறுத்தம் ஏற்படாமல் தவிர்க்க, உடனடியாக அந்தக் கோரிக்கைகள் பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இந்தக் கேள்வி பொதுவானதாக இருக்கிறது. குறிப்பிட்ட இந்தச் சிறப்பங்காடியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், தொழிலாளர்கள் பதினொன்றேமுக்கால் மணிக்கு அறிவிப்புக் கொடுத்தார்கள். பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்தும் வராமல் பன்னிரெண்டரை மணிக்கு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுதான் அங்கு ஏற்பட்ட நிலை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1977 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்கிற நிலையில் அடுத்த வினாவிற்குப் போகிறேன்.

அடுத்த வினாவையொட்டி ஒரு கவன ஈர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டிற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிட்டால் அதனையொட்டி துணை வினாக்கள் போட வாய்ப்பு இருக்கும். இரண்டையும் எடுத்துக்கொள்ளலாமா?

திரு. கோ. இளங்கோவன்: கவன ஈர்ப்பை எடுத்துக் கொண்டுவிட்டால், அதன் மீது கவன ஈர்ப்புத் கொடுத்த உறுப்பினர்களைத் தவிர மற்றவர்களும் துணை கேள்வி போட அனுமதிக்கப்படுவார்களா?

[முற்பகல் 9—10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் ஏகமனதான முடிவாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் இதே கருத்துக்கள்தான் அடங்கியிருக்கின்றன. கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற விளக்கங்கள் இந்தக் கேள்வியோடு இணைந்திருப்பதால் அதையும் படித்துவிட்டு, குறுகிய கால வினாவையும் எடுத்துக்கொண்டால் பின்னர் யார் வேண்டுமானாலும் துணைக் கேள்விகள் கேட்கலாம். இதற்கு அவையின் அனுமதி கேட்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நானும் இன்னொரு நண்பரும் கொடுத்திருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் இதோடு சேர்த்து எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் யார் கையெழுத்து போட்டுக்கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் மட்டும்தான் கேள்விகள் கேட்கலாம் என்று விளக்கத்தில் இருக்கிறது. கேள்வி நேரம் என்றால் மற்ற உறுப்பினர்களும் துணைக் கேள்விகள் கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் கேட்கக் கூடிய சந்தர்ப்பம் தரவேண்டும் என்றுதான் இதைச் சொல்கிறேன்.